### தொழிலாளர் சட்ட மசோதா: முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

# ஒன்றிய அரசின் புதிய தொழிலாளர் சட்டத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு!

## சென்னை தாம்பரத்தில் திராவிடர் கழகத் தொழிலாளரணி மாநாட்டில் தீர்மானம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை! தொ.மு.ச. பேரவை மு. சண்முகம் எம்.பி. தொடக்க உரை

தாம்பரம், மே 22- திராவிடர் தொழிலாளர் அணி 4ஆவது மாநில மாநாடு சென்னை தாம்பரத்தில் 20.5.2023 அன்று காலை தொடங்கி ஒரு நாள் நிகழ்வாக சிறப்புற ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. தாம்பரம் மாநகர் சாலைகளில் இருமருங்கும் கழகக் கொடிகள் அமைக்கப்பட்டு மாநாட்டு நிகழ்ச்சி களுக்கு பொதுமக்களை வரவேற்ற காட்சி அனைவரையும் கவர்ந்தது.

திராவிடர் தொழிலாளர் அணி4ஆவது மாநில மாநாட்டின் காலை நிகழ்ச்சிகள் தாம்பரம் ராஜாஜி சாலையில் அமைந்துள்ள டி.ஜி.பி. திருமண மண்டபத்தில் சிறப்புற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலையிலிருந்தே கழகக் குடும்பத்தவர்கள் தமிழ்நாடு முழுவதுமிருந்து பல்வேறு மாவட்டங்களிலிருந்து திரண்டு பங்கேற்றனர்.

தாம்பரம் டி.ஜி.பி. திருமண மண்டபத்தில் சுயமரியாதைச் சுடரொளிகள் திண்டுக்கல் கே.ஜி.சுப்பிரமணியம்நாகலிங்கம் நினைவரங்கத்தில் மாநாடு கருத்தரங்கு எழுச்சியுடன் தொடங்கியது. மாநாட்டின் காலை நேர நிகழ்வில் திராவிடர் கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், கருஞ்சட் டையினரின் பெருவெள்ளத்தில் அரங்கம் நிறைந்தது. திராவிடர் கழக தொழிலாளரணி மாநிலச் செயலாளர் மு.சேகர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து வழங்கினார்.

பகுத்தறிவு கலை நிகழ்ச்சியை திருத்தணி பன்னீர்செல்வம் குழுவினர் வழங்கினர்.

திருத்தணி பன்னீர்செல்வம் உள்ளிட்ட குழு வினருக்கு பயனாடை அணிவித்து திராவிடர் கழகத்துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் சிறப்பு செய்தார்.

**உற்சாக வரவேற்பு**

மாநாட்டின் கருத்தரங்கம் நடைபெறுகின்ற மண்டபத்துக்கு வருகை தந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களை உற்சாகத்துடன் கழகப் பொறுப்பாளர்கள் வரவேற்றனர்.

ஆசிரியர் கி.வீரமணி, தி.மு.க. தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பொதுச்செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கருத்தரங்க மேடைக்கு அழைக்கப்பட்டார்கள். திராவிடர் தொழிலாளர் கழகப் பேரவை பொருளாளர் மா.இராசு வரவேற்றார்.

திராவிடர் தொழிலாளர் கழகப் பேரவை செயலாளர் கருப்பட்டி கா.சிவகுரு நாதன் கொடி ஏற்றி வைத்தார். திராவிடர் தொழிலாளர் கழகப் பேரவை தலைவர் அ.மோகன் தலைமை யேற்று உரையாற்றினார். தந்தைபெரியார் படத்தைத் திறந்து வைத்து திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருள் மொழி உரையாற்றினார்.

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் கருத்தரங்கத்தில் தொடக்க உரையாற்றினார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு தாம்பரம் மாவட்டத் தலைவர் ப.முத்தையன் பயனாடை அணிவித்தார். தொ.மு.ச. சார்பில் அதன் பொறுப்பாளர் நடராஜன் ஆசிரியர் அவர்களுக்கு பயனாடை அணிவித்தார். தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் அவர்களுக்கு திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் பயனாடை அணிவித்து சிறப்பு செய்தார்.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

**கருத்தரங்கம்**

தொழிலாளியா? பங்காளியா? தலைப்பில் திராவிடர் கழகப்பொருளாளர் வீ.குமரேசன், ஊதியத்தில் ஆண் பெண் வேறுபாடு ஏன்? தலைப்பில் திராவிடர் கழகத்துணைப்பொதுச் செயலாளர் வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, தனியார் துறையிலும் தேவை இடஒதுக்கீடு தலைப்பில் திராவிடர் கழக வெளியுறவு செயலாளர் கோ.கருணாநிதி, ஒப்பந்தத் தொழிலாளர் முறை நீடிக்கலாமா? தலைப்பில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகரன் ஆகியோர் கருத்தரங்க உரையாற்றினார்கள்.

திராவிடர் தொழிலாளர் கழகப் பேரவை செயலாளர் குடந்தை க.குருசாமி தலைமையில் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

திராவிடர் கழக விவசாயத் தொழிலாளரணி மாநில

செயலாளர் க.வீரையன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**முதலமைச்சருக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி!**

தொழிலாளர்களின் பணி நேரத்தை 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாக தொழிலாளர்கள் விரும்பினால் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தலாம் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த 21.4.2023 அன்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து திராவிடர் கழகம் உட்பட தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகள் குரல் கொடுத்தன; இதனை நிறுத்தி வைப்பதாக அறிவித்த சமூக நீதிக்கான சரித்திர நாயகர் நமது மானமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 100ஆம் ஆண்டு மே தினத்தையொட்டி, முக்கிய கட்சிகள், தலைவர்கள் வேண்டுகோளை ஏற்று, முற்றிலு மாகரத்து செய்ததை இம்மாநாடு வரவேற்று அளவில்லா நன்றிப் பெருக்கை 'திராவிட மாடல்' அரசுக்கும், முதலமைச்சருக்கும் இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களைப் பங்காளியாக்க வேண்டும் என்று 1944இல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் செய்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயல்படுத்த முன்வரவேண்டும் என்று மாநில, ஒன்றிய அரசுகளை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி பொருந்தலாறு, பாலாறு கூட்டுக்குடிநீர் திட்டம் உள்ளிட்டவற்றில் 2010ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்துவரும் தற்காலிகப் பணியாளர்களுக்கு அரசு நிர்ணயித்த ஊதியத்தை வழங்காமல் தோராயமாக ரூ.4,000, ரூ.5000 என வழங்கப்படுவதுடன் பணிநிரந்தரம் தொடர்பான திண்டுக்கல் தொழிலாளர் நீதிமன்ற வழக்கிலும் நிருவாகம் முட்டுக்கட்டை யாக இருந்து வருவதைக் கைவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2021 தேர்தல் அறிக்கையில் கூறியபடி அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமெனவும், பணிப் பாதுகாப்புக்கு ESI, PF போன்ற உத்தரவாதமும், பணி மற்றும் பணிநேர வரன்முறையை உருவாக்கி பணியில் இறந்தவர்களுக்கு வாரிசு வேலையும், பணியில் விபத்துக்குள்ளாகி ஊனமுற்றவர்களுக்கு பணிநிரந்தரமும் செய்திட வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து உத்தரவிட்டுள்ள ஒன்றிய அரசை இம்மாநாடு கண்டிப்பதோடு, 100 நாள் என்பதை 150 நாட்களாக உயர்த்திடவும் அப்பணியாளர்கள் பயன் பெறும் வகையில் மேலும் வழிமுறைகளை வகுத்திடவும் தமிழ்நாடு அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் வேலை நேரத்தில் விபத்து ஏற்பட்டால் அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் ஆண் பெண் சமமாக ஊதியம் வழங்க வேண்டுமெனவும், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஓய்வூதியம் வழங்கிடவும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

ESI மூலம் மருத்துவ வசதி பெறும் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணயம் ரூ.20,000 என்று இருப்பதால் பெரும்பான்மையான தொழிலாளர்கள் மருத்துவ வசதி பெற இயலவில்லை. எனவே, ரூ.20,000 என்பதை உயர்த்தி நிர்ணயம் செய்திட இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**தனியார்த் துறைகளிலும் இடஒதுக்கீடு!**

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழிவந்த 'திராவிட மாடல்' ஆட்சியில் தமிழ்நாட்டில் தனியார் துறைகளிலும் இடஒதுக்கீடு கிடைத்திட சட்டம் இயற்றிட இம்மாநாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

தமிழ்நாட்டில் வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மின் இணைப்புப் பணிகள் செய்திட உரிமம் பெற்றோர் ஏராளமாக வேலையின்றி இருக்கும் நிலையில், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களே சொந்தமாக ஆள்வைத்து மேற்கண்ட பணி களைச் செய்வதைத் தடுத்து, தகுந்த உரிமம் பெற்றோர் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட வழிவகை செய்திட தமிழ்நாடு அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்வ தோடு, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வணிகக் கட்டடங்களுக்கான இணைப்புகளை மீண்டும் வழங்கிட ஆவன செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.

தனியார்த் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய நிர்ணயம் செய்திடும் வகையில் சட்டம் இயற்றி தனியார்த்துறை ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றிட தமிழ் நாடு அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**"பெல்' தொழிலாளர்களின் பிரச்சினைகள்**

BHEL ('பெல்') முதன்மை வேலை அளிப்பவர் (PRINCIPAL EMPLOYER) ஒப்பந்த தொழிலாளர் பணிகளை ஒப்பந்ததாரரிடம் வழங்குகிறார். ஒப்பந்ததாரர்கள் ஆண்டுதோறும் உரிமத்தைப் புதுப்பித்து வேலை செய்கிறார்கள். ஆனால், அரசு, ஒப்பந்தத் தொழிலாளர் முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல் சட்டம் 1970 (CLR & ACT 1970) அய் நடைமுறைப்படுத்துவதில்லை. முதன்மை வேலை அளிப்பவர் தொடர்ச்சியாக எல்லா வேலைகளையும் ஒப்பந்த அடிப்படையில் வழங்குகிறார்கள். இம்முறையை மாற்றியமைத்திட வேண்டுமெனவும், தொடர்ச்சி அல்லாத வேலைகளை மட்டும் ஒப்பந்ததாரருக்கு வழங்கி அரசு இயற்றியுள்ள சட்டம் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒன்றிய, மாநில அரசுகள் மாற்றியமைக்க ஆவன செய்திட வேண்டுமெனவும், முதன்மை வேலையளிப்பவர் ஒப்பந்தம் வழங்கும்போது ஏற்கனவே அந்தப் பணிகளைச் செய்து வந்த தொழிலாளர்களுக்கு தொடர் பணிகள் மறுக்கப்படுவதைக் கண்டிப் பதோடு, ஏற்கெனவே பணிபுரிந்த தொழிலாளர்களைப் பாதிக்காதவாறு ஒப்பந்தங்களை மாற்றியமைக்க வேண்டுமெனவும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு மற்ற அரசுத் துறை ஊழியர்களுக்கு இருப்பது போல எளிமையான காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்திட தமிழ்நாடு அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் மாநகர, பேரூர், ஊராட்சி குடிநீர் வழங்கல் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்திட இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

கட்டுமானம், அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திடுக! தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களில் தோட்டத் தொழிலில் ஈடுபடுவோருக்கு மழைக்கோட், தொப்பி, களையெடுக்கும் எந்திரம் போன்றவை வழங்க ஆவன செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

சேலம் காரிபட்டி ஹட்சன் ஆக்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களைப் பணியமர்த்தி அவர்களுக்கு சட்டப்படியாக வழங்க வேண்டிய ESI, PF போன்றவற்றை வழங்காமல், மேற்படி தொழிலாளர்களை கொத்தடிமைகள் போல் நடத்துவதை இம்மாநாடு கண்டிப்பதுடன் மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் தொழிலாளர் பணித்துறையும், ஆய்வு செய்து ஹட்சன் அக்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

14ஆவது ஊதிய ஒப்பந்தம் (12/3) பெரும்பான்மை சங்கங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சிறப்பாக ஊதிய உயர்வு வழங்கிய திராவிட மாடல் தி.மு.க. அரசுக்கு நமது நன்றியை இம்மாநாடு தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த 1.11.2022 முதல் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் பணியில் இறந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அவர்களின் ஓய்வு கால பணப்பலன்கள் வழங்கப்படவில்லை. அவை உடனே வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

குறிப்பிட்ட கால அளவில் பணியாற்றிய ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்த வேண்டும் என்றும்! அடுத்து, ஒப்பந்தத் தொழிலாளர் முறையையே அறவே ஒழிக்க வேண்டும் என்றும் இம்மாநாடு மாநில, ஒன்றிய அரசுகளை வற்புறுத்துகிறது.

தண்ணீரிலும் கண்ணீரிலும் தத்தளிக்கும் மீனவத் தொழிலாளிகள் அரசுக்கு வைத்த கோரிக்கைகளை மனிதாபிமானத்துடன் சீர்தூக்கிச் செயல்படுத்துமாறு மாநில, ஒன்றிய அரசுகளை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டு மீனவர்களை வேட்டையாடியும், கைது செய்தும் சிறையில் அடைத்தும், வலைகளையும், படகுகளையும் பறிமுதல் செய்து வரும் இலங்கை அரசின் அராஜகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு ஒன்றிய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

விவசாயிகளின் நலனைப் பாதிக்க கூடிய இந்திய அரசின் வேளாண் சட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்த மாட்டோம் என தமிழ்நாடு அரசு தீர்மானத்தை நிறைவேற்றியது போன்று, தொழிலாளர்களின் நலனைப் பாதிக்கக் கூடிய இந்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதிலிருந்து விலக்களிக்குமாறு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், பொற்பனைக்கோட்டையில் தொல்லியல் அகழாய்வுப் பணியினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு, தொல்லியல்துறை இயக்குநர், புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டங்களில்

# சீரான மின் விநியோகம் தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - வி.செந்தில்பாலாஜி பங்கேற்பு

சென்னை, மே 22 - குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பா லாஜி ஆகியோர் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சீரான மின் விநியோகம் வழங்குவது தொடர்பான சிறப்பு ஆய்வு கூட்டம் மேற்கொண்டார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையிலும், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி அவர்கள் முன்னிலையிலும், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சீரான மின் விநியோகம் வழங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மின்சார வாரிய அலுவலர்களுடன் நடைபெற்ற சிறப்பு ஆய்வு நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுவினை அமைச்சர் பெருமக்கள் பெற்றுக்கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் (காஞ்சிபுரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர் (உத்திர மேரூர்), இ.கருணாநிதி (பல்லாவரம்), திருமதி.வரலட்சுமிமதுசூதனன் (செங்கல்பட்டு), சி.வி.எம்.பி.எழிலரசன் (காஞ்சிபுரம்), எஸ்.எஸ்.பாலாஜி (திருப்போரூர்), மு.பாபு (செய்யூர்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர்/பகிர்மானம் மா.சிவலிங்கராஜன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ஆ.மனோகரன்,

செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி. செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. மகாலட்சுமி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ், மறைமலைநகர் நகராட்சி மன்ற தலைவர் ஜெ.சண்முகம் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி மன்ற தலைவர் திருமதி. தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத் வரவேற்புரையும் காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவருத்திரய்யா நன்றி கூறினார்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.63 கோடி மதிப்பீட்டில் நான்கு வழித்தடபாதை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திட்டப்பணியை துவக்கி வைத்தார்!

அரியலூர், மே 22- இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைமையிடத்தை இணைக்கும் வகையில் சுமார் 2500 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை பகுதிவாரியாக இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக தரம் உயர்த்துதலில், நடப்பு நிதி ஆண்டில் (2022-2023) சுமார் 150 கி.மீ நீளம் உள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் கிராமத்தில் அரியலூர் நெடுஞ்சாலைக் கோட்டம், ஜெயங்கொண்டம் உட்கோட்டத்தில் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.63 கோடி மதிப்பீட்டில் விருத்தாசலம் ஜெயங்கொண்டம் மதனத்தூர் சாலை கி.மீ 21/10 22/6 (SH 140) வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ.26/10 சிறுபாலத்தை திரும்பக் கட்டுதல், வடிகால், தடுப்புச்சுவர் மற்றும் சென்டர் மீடியன் கட்டுதல், கல்வெட்டுகள் அகலப்படுத்தும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். மேலும், சா லை ஓரத்தில் மரக்கன்றுகளையும் நட்டார்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் உத்திராண்டி, உதவி கோட்டப் பொறியாளர் கருணாநிதி, உதவி பொறியாளர் விக்னேஷ் ராஜ், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர்,முன்னாள் ஒன்றிய செயலாளர் க.தர்மதுரை, ஆர்.கலியபெருமாள், ரெங்க.முருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.ஆர் யிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். இராமராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பானுமதி, துணை அமைப்பாளர் இராணி மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கொண்டயம்பள்ளி க. இராமசாமி**

**மே 22 (1991)**

இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, தலைவாசல் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஆத்தூர் வட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவராகவும் – வீரகனூர் வீடுகட்டும் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் நடைபெற்ற இந்தி சட்டஎரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



### தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

## மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26-05-2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.5.2023

இரா.கிரிராஜன், எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு